Fachhochschule Nordwestschweiz
Pädagogische Hochschule

# ESKE
Evaluation des compétences scolaires en langue première

# TAMOUL


## Série de tâches de 5 à 6 ans d'expérience scolaire

Pädagogische Hochschule FHNW 2021 / Haute école pédagogique FHNW 2021

Professur Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter / Chaire de didactique de l'allemand et du plurilinguisme chez l'enfant

**பயிற்சிகள்**

1. **பின்வரும் பந்தியை உரத்து வாசிக்கவும்.**



**தேள் - இது ஒரு சிலந்தி குடும்பத்தைச் சேர்ந்தது**
வெப்ப வலைய நாடுகளில் சிறிய துளைகள் உள்ள சுவர்களில் அல்லது கற்களிற்கிடையில் உங்கள் விரலை வைப்பது ஒரு நல்ல விடயம் அல்ல. நீண்ட நாட்கள் பாவனையில்லாத காலணிகளை உபயோகிக்கும் பொழுது கட்டாயமாக அதனைத் தட்ட அல்லது உதற வேண்டும். சில சந்தர்ப்பங்களில் ஏதாவது உள்ளுக்குள் ஒழிந்து இருக்கும். தேள்களுக்கு வெளிச்சம் விருப்பம் இல்லை, அவை பகல் நேரங்களில் துளைகள் அல்லது இருட்டான இடங்களில் ஒழிந்திருக்கும். தேள்கள் வெப்பவலைய நாடுகளில் பரவலாக உள்ளன. ஆனால் காண்பது அரிது.

**தங்கள் ஊனை மரணிக்கும் வரை குத்தும்**
தேள்கள் மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்தவை, அத்துடன் இவை மனிதர்களைக் கொல்லும் நச்சுத் தன்மை வாய்ந்தவை அல்ல. அவற்றின் இனத்தைப் பொறுத்து 1 இற்கும் 21 சென்றிமீற்றர் நீளத்திற்கு உட்பட்டதாக இருக்கும். எல்லா இனத்தின் வாலின் நுனிப்பகுதியில் நச்சுத் தன்மை வாய்ந்த கொடுக்கு உள்ளது. தேள் தன் ஊனைக் கொல்வதற்கு, முதலில் தனது கால்களால் பிடிக்கும். அதன் பின் தான் வாலை முதுகுக்கு மேலால் வளைத்து எதிரியைக் குத்தும். பயம் கொண்ட தேள் விரைவாகத் திரும்பி தனது கொடுக்கை எதிரிக்குக் காட்டும்.

தேள்கள் இரவில் சிலந்திகளையும் மற்றைய ஜந்துக்களையும் வேட்டையாடுகின்றன. காலால் நடந்து, ஊனைப் பிடித்து (ஜந்துக்கள்) நச்சுத் தன்மை வாய்ந்த கொடுக்கால் கொட்டி ஊனை இறக்கச் செய்யும்.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**2. பயிற்சி 1 இல் உள்ள விடயங்களை வாசித்த பின்னர் பின்வரும் வசனங்கள் சரியாயின் " சரி" எனவும் பிழையாயின் " பிழை" எனவும் குறிப்பிடுக.**

1. தேள்கள் இருளை விரும்புகின்றன. சரி ☐ பிழை ☐
2. எல்லாத் தேள்களும் மனிதர்களைக் கொல்லும் தன்மை வாய்ந்தவை. சரி ☐ பிழை ☐
3. எல்லாத் தேள்களும் ஒரே அளவானவை. சரி ☐ பிழை ☐
4. தேள் தன் எதிரியை தனது கால்கலால் பிடிக்கும். சரி ☐ பிழை ☐



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

3. பயிற்சி இலக்கம் “ 1 ஐ ” விபரிக்குக.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

4. பயிற்சி “ 1 இன் ” பந்தியில் இருந்து ஏன் காலணிகளை உதறுதல் வேண்டும். ஏன் இதைச் செய்ய வேண்டும். விபரிக்கவும்.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**5. எந்தப் பந்தியில் காலநிலை ஈரமானது என்பதால் ஓட்டப்போட்டி நடைபெறவில்லை. அதனைக் கண்டறிந்து வட்டமிடுக.**

அ. பால்ப் பெட்டி ஓட்டம் ஓர் ஆரோக்கியமான வாழ்க்கை முறையினை ஊக்கிவிக்கும். நிகழ்ச்சியில் பங்குகொள்ளுவதர்க்கு வெறும் பால்ப் பெட்டியால் செய்யப்பட்ட வண்டி, கையால் இயக்க கூடியதாகவும் நீரில் மிதக்கவும் வேண்டும்.

---

ஆ. 50 வருட காலமாக குளியல்த்தொட்டி ஓட்டம் நடைபெறுகிறது. இவ் ஓட்டம் 58 கி.மீ தூரமும் பல பாதுகாப்பான கோடுகளைக் கொண்டுள்ளது. அனைத்து மோட்டார் வண்டிகளின் அளவும், வடிவமும் ஒரு பழங்காலத்து குளியல்த் தொட்டியின் அமைப்பை போன்று இருக்க வேண்டும். வண்டிகளின் இயந்திரம் சக்தி குறைந்ததாக இருக்க வேண்டும்.

---

இ. வரண்ட ஆறு ஓட்டப் போட்டி ஒரு வரண்ட ஆற்றுக்குள் நடைபெறும். ஆற்றுக்குள் மறுபடியும் நீர் இருந்ததால் போட்டி இரத்துச் செய்யப்பட்டது. இவ் ஓட்டப் போட்டியில் „படகுக்கு“ நிலம் இல்லை. பங்குபற்றுபவர்கள் படகினைத் தூக்கிக் கொண்டு ஓடுதல் வேண்டும்.


---

ஈ. குடிபானங்களின் கொள்கலன் (டின்) றெக்காடா (Regatta) ஒவ்வொரு வருடமும் நடைபெறும். வண்டி பானங்கள் இல்லாத கொள்கலன்களால் (டின்) செய்யப்பட்டு உள்ளே ஓர் இயந்திரம் பொருத்தப் பட்டிருக்கும். தொடக்கத்தில் பல வண்டிகள் பழுதடைய, இது ஒரு பொதுவான பொழுது போக்காகும்.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**6. வரைபடத்தைப் பார்த்த பின்னர் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.**




அ. எந்த இடம் துறைமுகத்திற்கு அருகில் உள்ளது?

☐ நகரம்.
☐ ஆறு.
☐ விவசாயப் பண்ணை.

ஆ. சரியான வடக்குத் திசையில் உள்ளது எது?

☐ விமான நிலையம்.
☐ காடு.
☐ விவசாயப் பண்ணை.

இ. நகரத்தின் ஊடாக ஆற்றை அடைவதற்கு எத்திக்கில் செல்லுதல் வேண்டும்?

☐ வடக்கை நோக்கி.
☐ மேற்கை நோக்கி.
☐ கிழக்கை நோக்கி.

ஈ. தீவைச் சுற்றி நடப்பதற்கு பின்வரும் வழியைப் பின்பற்றுங்கள்.

- முதலில் கிராமத்தில் ஆரம்பியுங்கள்
- துறைமுகத்திற்குரிய பாதையில் செல்லுங்கள்
- இரண்டாவது சந்தியில் இடப்பக்கமாக திரும்புங்கள்
- தெரு முடியும் வரை போகவும்
- இப்பொழுது எங்கு நிற்கின்றீர்கள்?

☐ விவசாயப் பண்ணையில்.
☐ நகரத்தில்.
☐ துறைமுகத்தில.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**7. இப் பந்தியினை உரத்து வாசிக்கவும்.**

**புஸ்பந்து (Buschball)**

எங்கேயாவது புஸ்பந்து (**Busch ball)** என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருப்பீர்களா? இது பிரதானமாக கால்ப்பந்தாட்டத்திற்கும் கொல்வுக்கும் இடைப்பட்டதாகும். இந்த விளையாட்டின் நோக்கம், இயற்கையில் நடப்பட்டுள்ள கொடியை, காற்பந்தினால் குறைவான அடியுடன் அடைதல். இதில் விளையாடுவதற்கு குறைந்தது இருவர் தேவை. இதில் ஒருவர் கொடியை வைக்க, மற்றவர் அதை அடைய முயற்சிக்க வேண்டும். கொடியை அடைய எவ்வளவு தரம் பந்து அடிக்கப்பட்டது என எண்ணப்படும். 9 அடிக்குக் கூடக்கூடாது. ஒவ்வொருவரும் கொடியை அடைந்தால் முதலாம் சுற்று முடிந்து விடும். எத்தனை சுற்று விளையாட விரும்புகின்றார்களோ அதனை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**8. பயிற்சி “7 இல் ” உள்ள விடயங்களை வாசித்த பின்னர் பின்வரும் வசனங்கள் சரியாயின் “ சரி ” எனவும் பிழையாயின் “ பிழை” எனவும் குறிப்பிடுக.**

அ. இப்பந்தியின் கருத்து என்ன?

☐ இப்பந்தி காற்பந்தாட்டத்திற்கும் கொல்வுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குகிறது.
☐ இப்பந்தி “புஸ்பந்து” (Buschball) இன் விளையாட்டு விதிமுறைகளை விளக்கியுள்ளது.
☐ ஒரு விசேடமான கொடியை இப் பந்தி விபரிக்கின்றது.
☐ இப்பந்தி கொடியினை எதற்குப் பயன்படுத்தலாம் என்கிறது.

ஆ. “புஸ்பந்து” இல் எதனை அடைய வேண்டும்?

☐ கொடியினைப் பிடிக்கின்ற விளையாடுபவரை.
☐ விளையாடுபவர் கையில் வைத்திருக்கும் கொடியை.
☐ நிலத்தில் நட்ட கொடியை.
☐ நிலத்தில் நடப்பட்ட இரு கொடிகளுக்குமிடையில்.

இ. என்ன எண்ணப்படும்?

☐ குறியை எத்தனை தடவை அடைந்தார்கள்.
☐ சுற்றுக்களின் எண்ணிக்கை.
☐ விளையாடுபவர் தீர்மானிப்பார்.
☐ குறியை அடைய தேவைப்பட்ட அடிகள்.

ஈ. எந்த இரண்டு விளையாட்டுமுறைகள் “புஸ்பந்து” (Buschball) இல் இணைக்கப்பட்டுள்ளன.

☐ கொல்வ்வும், டெனிஸ்யும்
☐ காற்பந்தும், கொல்வ்வும்
☐ கைப்பந்தும், காற்பந்தும்
☐ கொல்வ்வும், கைப்பந்தும்

உ. எப்பொழுது ஒரு சுற்று முடிவடையும்? எல்லா விளையாடுபவரும் ….

☐ கொடியை நட்டதும்.
☐ குறியை அடைந்ததும்.
☐ பந்தை எறிந்தால்.
☐ மற்றைய விளையாட்டாளரைச் சந்திக்கும் வரை.

ஏ. காற்பந்தாட்டத்திற்கும் கோல்வுக்கும் இடைப்பட்டதாகும். இதன் அர்த்தம் என்ன?

☐ இவ் விளையாட்டு ஒரு தெருவின் சந்தியில் விளையாடப்படும்.
☐ ஒரே நேரத்தில் காற்பந்தும் கொல்வும் விளையாடப்படும்.
☐ இந்த விளையாட்டு சிறிது காற்பந்தும் சிறிது கொல்வும் சேர்ந்தது.
☐ ஒரு குழு காற்பந்தும் மற்றைய குழு கொல்வும் விளையாடும்.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter

**9.** ஒரு நல்ல நண்பியை அல்லது நண்பனை சிந்திக்கவும். உங்களின் நட்பு எவ்வாறு உருவாகியது என்பதையும், ஏன் உங்கள் நண்பன் அல்லது நண்பியை விரும்புகின்றீர்கள் என்பதையும் இந்த நட்பு எதைக் குறிக்கின்றது என்பதையும் விவரிக்குக.



© 2018 Pädagogische Hochschule Fachhochschule Nordwestschweiz
IKU Prof. Deutschdidaktik und Mehrsprachigkeit im Kindesalter